பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 18 ஞாயிற்றுக்கிழமை 01.05.2022 கதிர் 70

## நாடளாவிய ரீதியில் மே தினக் கூட்டங்கள்

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு பிரதான அரசியல் கட்சிகளால் நாடளாவிய ரீதியில் மே தினக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்று வருகின்றன.

ஆளுங்கட்சியான பொதுஜன பெரமுனவின் கூட்டம் கட்சி தலைவரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஸ்தாபகரான

☞2

# முடிவு ஜனாதிபதியிடம் எதற்கும் பிரதமர் தயார்!



## கோட்டாவுக்கு மஹிந்தர் செய்தி

பிரதமர் பதவி தொடர்பில் ஜனாதிபதி என்ற முறையில் உங்களுக்கு உசிதமானது என நீங்கள் கருதும் எந்தத் தீர்மானத்தையும் எடுங்கள். அதனை ஏற்றுக் கொள்ள நான் தயார் எனத் தம்பியார் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்குத் தமையனார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அறிவித்துள்ளார்.

பிரதமர் தனது நிலைப்பாட்டை இன்று காலை ஜனாதிபதியிடம் தெரிவித்தார் என பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்குத் தகவல் வழங்கியுள்ளார்.

இதன்போதே பிரதமர் மேற்படி விடயத்தை ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார் எனப் பிரதமர் அலுவலகத்தின் சிரேஷ்ட அதிகாரி குறிப்பிட்டார்.

☞2

## சர்வக்கட்சி அரசுக்கு இணக்கத்தை ஏற்படுத்தும் மகாசங்கத்தின் ஆரம்பக் கட்ட முயற்சி தோல்வி!

### ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் விடாப்பிடி நிலை

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதி பதவியில் நீடிக்கும்வரை, சர்வக்கட்சி இடைக்கால அரசில் இணையமுடியாது என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியும் மகா சங்கத்தினரிடம் எடுத்துரைத்துள்ளன.

இதனால் சர்வக்கட்சி இடைக்கால அரசுக்காக, பிரதான எதிர்க்கட்சிகளை பொது

☞2

## நிலைமை கை மீறி விட்டது! விஜயதாஸ ராஜபக்ஷ விசனம்

தற்போதைய நெருக்கடியில் இலங்கையின் அனைத்து வழிகளும் கைமீறி போய்விட்டன எனவும், சுமூகமான தீர்வுகளைக் காணும் காலம் கடந்துவிட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி

☞2

## கூட்டமைப்பு மேதினம் கிளிநொச்சி நகரத்தில்



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினப் பேரணி இன்று பிற்பகல் 2 மணிக்கு கிளிநொச்சி கரடிப்போக்குச் சந்தியிலிருந்து ஆரம்பித்தது.

☞2

## அலரிமாளிகைக்கு முன்பாக வீதியின் நடுவே குந்துமறியல்

கொழும்பில் அலரிமாளிகைக்கு முன்பாக ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியின் நடுவே அமர்ந்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அலரிமாளிகைக்கு அருகில் வீதியோர போராட்டக் கூடாரங்களை பொலிஸார் அகற்றியதை யடுத்து, அவர்கள் இவ்வாறு நடு வீதியில் போராட்டத்தில்

☞7



## வவுனியா ஊடகவியலாளர்கள் மீது மூர்க்கத்தன கொலை வெறித்தாக்குதல்

### மூவர் பொலிஸாரால் கைது!

வவுனியாவில் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளர் உட்பட மூவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

நேற்று மாலை

☞2

## மீனவர் சங்கத் தலைவரின் படகை மோதித் தள்ளிய கடற்படைப் படகு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மே.01



வடமராட்சி கடற்பரப்பில் கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ஒருவரின் படகு மீது படையினரின் படகு மோதி விபத்திற்குள்ளானதில் மீனவரின் படகு மற்றும் இயந்திரம் என்பன சேதமடைந்தன.

சம்பவத்தில் சுப்பர்மடம் சங்கத் தலைவரின் படகு மீதே கடற்படையினரின் படகு மோதியுள்ளது. படகிலிருந்த

☞7

## பஸ் - ஓட்டோ நேருக்கு நேர் மோதல் மன்னம்பிட்டியில் 3 வயோதிபர்கள் பலி





பொலன்னறுவை - மட்டக்களப்பு பிரதான வீதியில் மன்னம்பிட்டி பாலத்திற்கு அருகில் இன்று காலை 6.30 அளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் வயோதிபத் தம்பதியர் மற்றும் அவர்களின் உறவினரான இன்னொரு வயோதிப மாது என மூவர் உயிரிழந்துள்ளனர்.

தனியார் பஸ்ஸும் ஓட்டோவும் நேருக்கு நேர் மோதியதில் ஓட்டோவில் பயணித்த

☞2

## 129 கிலோ கேரளக் கஞ்சா கிளிநொச்சியில் சிக்கியது

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் ,மே.01



கிளிநொச்சி வேரவில் பகுதியில் இருந்து 129 கிலோ கேரள கஞ்சா இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி இராணுவ புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலிற்கமைவாக மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்தக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்தக் கஞ்சா பொதிகள் இந்தியாவிலிருந்து கடல்வழியாகக் கொண்டுவரப்பட்டு வெளி இடங்களிற்கு அனுப்பும்

☞2

## வவுனியா ஊடகவியலாளர்கள் மீது .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வவுனியா வேப்பங்குளம் பகுதியில் அமைந்துள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக வவுனியாவை சேர்ந்த இரு ஊடகவியலாளர்கள் சென்றுள்ளனர்.

இதன்போது அதிகமான பொதுமக்கள் வரிசையில் நின்றமையால் அந்த நெரிசலை கட்டுப்படுத்துவதற்கு ஊடகவியலாளர்களால் சில ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இதனையடுத்து எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமையில் இருந்த ஊழியர்களுக்கும், அவர்களுக்கும் இடையில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது.

கருத்து முரண்பாடு முற்றிய நிலையில் தாம் ஊடகவியலாளர்கள் என அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தனர். அதனை பொருட்படுத்தாத ஊழியர்கள் கடந்த முறையும் எமது நிரப்பு நிலையம் தொடர்பான செய்தியை நீதானே பிரசுரித்தாய் எனக் கூறிக் கடுமையாக தாக்கியுள்ளனர். சம்பவத்தில் ஊழியர்களுடன் இணைந்து நிரப்பு நிலையத்தின் முகாமையாளரும் தாக்கியிருந்தார்.

அத்துடன் அவர்களது மோட்டார் சைக்கிளும் பறிமுதல் செய்யப்பட்டு அடித்துத் துரத்தப்பட்டனர். சம்பவத்தில் காயமடைந்த ஊடகவியலாளர் ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. சம்பவ இடத்திற்கு சென்ற நெளுக்குளம் பொலிஸார் எரிபொருள் நிரப்பு நிலையத்தின் முகாமையாளர் உட்பட மூன்று பேரை கைது செய்துள்ளமையுடன் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இதேவேளை குறித்த நிரப்பு நிலையத்தின் கண்காணிப்பு கமரா பதிவுகளை வழங்குமாறு ஏனைய ஊடகவியலாளர்களால் அதன் நடத்துநருக்குக் கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் மின்சாரம் இல்லை என்பதால் இரகசிய கமரா இயங்கவில்லை எனக் குறித்த நிலைய முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டது.

நாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் வவுனியாவில் அமைந்துள்ள பிரதான நிரப்பு நிலையங்களில் எரிபொருளை பெற்றுக் கொள்வதில் பொதுமக்களுக்கும், நிரப்பு நிலையத்தின் ஊழியர்களுக்கும் இடையில் தொடர்ச்சியாக முரண்பாடுகள் ஏற்பட்டுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## கூட்டமைப்பு மேதினம் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் தலைவர்களும் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும் இதில் பங்கு கொண்டனர்.

பேரணியின் முடிவில் கிளிநொச்சி பசுமைப் பூங்காவில் மேதினக் கூட்டம் ஆரம்பமானது.

## சர்வக்கட்சி அரசுக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டுக்கு கொண்டுவரும் ஆரம்பக்கட்ட முயற்சி தோல்வியில் முடிவடைந்துள்ளது.

எனினும், ஏதோவொரு அடிப்படையில் கட்சிகளை இணக்கப்பாட்டுக்கு கொண்டுவருவதற்காக, இரண்டாம் கட்ட சந்திப்பை நடத்துவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், மகா சங்கத்தினருக்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்றிரவு இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெற்றது. சர்வ மத தலைவர்களும், சிவில் செயற்பாட்டாளர்களும் இச்சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

இக்கூட்டத்தில் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் ரஞ்சித் மத்தும பண்டாரவும், தேசிய மக்களின் சார்பில் விஜித ஹேரத்தும், 43 ஆம் படையணியின் சார்பில் சம்பிக்க ரணவக்கவும், ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் மஹிந்த அமரவீரவும், 11 கட்சிகளின் பிரதிநிதிகளும் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். தமிழ் மற்றும் முஸ்லிம் கட்சிகளின் பிரதிநிதிகள் சிலரும் பங்கேற்றிருந்தனர்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவில்லை என்ற போதிலும் அக்கட்சியின் பிரதிநிதியொருவர் வருகை தந்திருந்தார். ஆளுங்கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் மேற்படி சந்திப்பில் எவரும் பங்கேற்கவில்லை. மொட்டு கட்சியின் தவிசாளர் பீரிஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

மூன்று பௌத்த பீடங்களையும் சேர்ந்த மகாசங்கத்தினரால் வெளியிடப்பட்ட பிரகடனம் சம்பந்தமாக, கட்சி பிரதிநிதிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. சர்வக்கட்சி இடைக்கால அரசமைக்க ஓரணியில் திரளுமாறும் அழைப்பு விடுக்கப்பட்டது. அதன்பின்னர் அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள், தமது கட்சிகளின் நிலைப்பாடுகளை தெளிவுபடுத்தினர்.

ஜனாதிபதி பதவியில் கோட்டாபய ராஜபக்ஷ நீடிக்கும் நிலையில், புதிய பிரதமரின் கீழ் சர்வக்கட்சி இடைக்கால அரசமைக்க 11 கட்சிகளின் பிரதிநிதிகள் தமது ஆதரவை தெரிவித்தனர்.

ஜனாதிபதி பதவியில் கோட்டாபய ராஜபக்ஷ நீடிக்கும்வரை, சர்வக்கட்சி இடைக்கால அரசு பொறிமுறை குறித்து சாதகமான பதிலை வழங்கமுடியாது, எனினும், மகாசங்கத்தினரின் பிரகடனம் சம்பந்தமாக கட்சியில் மீண்டும் கலந்துரையாடப்படும் என ஐக்கிய மக்கள் சக்தி சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வக்கட்சி இடைக்கால அரசு என்பதைவிடவும் தேர்தலொன்றுக்கு சென்று, புதிய ஆட்சியை ஏற்படுத்துவதே சிறந்த வழி. என தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

சர்வக்கட்சி இடைக்கால அரசுக்கு, எதிரணிகள் உடன்படாவிட்டால், இணங்கும் தரப்புகளை இணைத்துக்கொண்டாவது பயணிக்க வேண்டும். என வாசுதேவ நாணயக்கார குறிப்பிட்டார்.

## பஸ் - ஓட்டோ நேருக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பேர் உயிரிழந்துள்ளனர் என மன்னம்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

அரலகங்வில அருணபுர பிரதேசத்தை சேர்ந்த 67 வயதான யு.டப்ளியூ. ஜீ.ரண்பண்டா, 62 வயதான அவரது மனைவி ஜீ.கே. நந்தவதி மற்றும் இவர்களின் உறவினரான டி.ஜீ.விமலா ரந்தெனிய என்ற 72 வயதான பெண்மணி ஆகியோரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் அருணபுர பிரதேசத்தில் இருந்து மாத்தளையில் உள்ள உறவினர்களின் வீட்டுக்கு செல்லும் வழியில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இவர்கள் சென்ற ஓடோவுடன் மோதிய தனியார் பஸ் பொலன்னறுவை திசையில் இருந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் ஊழியர்களை ஏற்றிச் சென்றுள்ளது.

பஸ்ஸின் சாரதியை தாங்கள் கைது செய்துள்ளோம் என மன்னம்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அசேல சரத் குமார தெரிவித்துள்ளார்.

ஓட்டோ மற்றுமொரு பஸ்ஸை முந்தி செல்ல முற்பட்டபோது, எதிரில் வந்த பஸ்ஸுடன் நேருக்கு நேர் மோதியுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

## 129 கிலோ கேரளக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோக்குடன், பூநகரி வேரவில் பிரதேசத்தில் உள்ள ஓர் பற்றைக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த சமயமே கைப்பற்றப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட கஞ்சா பொதிகளின் பெறுமதி இலங்கை மதிப்பில் 2.5 கோடி ரூபா என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பொதிகள் கிளிநொச்சி ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என பிரதான எதிர்க்கட்சிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கை மகாநாயக்க தேரர்களின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும் என மகா சங்கத்தினர் சந்திப்பின் பின்னர் கருத்து வெளியிட்டனர்.

## நிலைமை கை மீறி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை தொடர்பில் தகவல் வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது தொடர்ந்தும் பேசிய அவர் -

கடந்த ஏப்ரல் மாதத்தில் அரசியல் ரீதியாக முக்கியமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. அதனை நான் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் தெளிவாக எடுத்துரைத்திருந்தோம். அந்த நேரத்தில் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் அந்த விடயத்தினை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. அதன் பின்னர் நிலைமைகள் நாளுக்கு நாள் மோசமடைய ஆரம்பித்தன.

காலம் கடந்து சென்ற போது, பொருளாதார நிலைமைகள் மேலும் மேலும் நெருக்கடியான கட்டத்தினை அடைந்தன. மறுபுறம் காலிமுகத்திடல் தொடர் போராட்டங்கள் உட்பட பொதுமக்கள் வீதிக்கு இறங்கினார்கள். அந்தப்போராட்டங்கள் முழு வீச்சினை அடைந்து விட்டன -

இந்த நிலையில் கூட, 21ஆவது திருத்தச்சட்டத்தைத் தற்காலிக ஏற்பாடாக கொண்டுவருவதற்கான வரைவொன்றை தனிநபர் பிரேரணையாக நான் உள்ளிட்ட எமது அணியினர் சபாநாயகரிடத்தில் கையளித்துள்ளோம். இருப்பினும், அதுசம்பந்தமாக அரசாங்கம் எந்தவிதமான அக்கறையையும் கொண்டதாகத் தெரியவில்லை.

தற்சமயம் ஜனாதிபதி சர்வகட்சிகளின் பங்கேற்புடனான இடைக்கால அரசாங்கத்தினை அமைப்பதற்கு தயாராக உள்ளார் எனக் கூறுகிறார். எனினும் எதிர்க்கட்சி இந்த செயற்றிட்டத்தில் இணைவதற்கு முயற்சிக்கவில்லை. ஆகவே இந்த முயற்சி வெற்றி அளிக்கும் என்று திடமாக நம்பிக்கை கொள்ள முடியாது.

இச்சந்தர்ப்பத்தில் சவால்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய திராணியைக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் எதிர்க்கட்சி சவால்களுக்கு முகங்கொடுக்காது, தனது அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் செயற்பட்டுக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

தற்போதைய நிலையில் நாட்டில் இருக்கும் ஏனைய கட்சிகளும் அந்த மனோநிலையையே கொண்டிருக்கின்றன. இச்சூழ்நிலையில் இலங்கையின் நெருக்கடிகளுக்கு சுமுகமான தீர்வுகளைக் காணும் காலங்கடந்துவிட்டது. அனைத்து நிலைமைகளும் கைமீறி விட்டன. இந்நிலையில் இறுதி தீர்மானம் கோட்டாபயவிடத்திலேயே உள்ளது.

நிறைவேற்று அதிகாரமுறை ஜனாதிபதியிடம் தான் இறுதி தீர்மானம் உள்ளது. இந்த நெருக்கடியான காலகட்டத்தில் கோட்டாபய ராஜபக்ஷ நாடாளுமன்றத்திற்கு அதிகாரங்களை வழங்கப்போகின்றாரா? இல்லை புதிய பிரதமர் தலைமையில் அரசாங்கத்தினை அமைக்கப் போகின்றாரா? அல்லது போராட்டக்காரர்களின் கோரிக்கைகளுக்கு அமைவாக தான் பதவிலிருந்து வெளியேறப் போகின்றாரா என்பதை அவர் தான் முடிவெடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும் இன்றைய இந்த நெருக்கடியான கால கட்டத்தில் மேலும் காலம் கடத்தப்படுமாயின், நிலைமை மேலும் மேலும் கையை மீறி செல்லும் என்பதுடன், நிலைமை உக்கிரமடையும். மக்கள் இப்போது, 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேவையில்லை என்ற மன நிலைக்கு வந்துவிட்டனர்.

காலத்தை இழுத்தடித்தால் மக்களின் அந்த மன நிலை மேலும் உறுதியாகும். நாட்டில் போராட்டங்கள் தீவிரத் தன்மை அடையும். பொருளாதாரம், மற்றும் அரசியல் நெருக்கடி தொடர்ந்தும் நீடித்து இலங்கையின் நிலை நினைத்தும் பார்க்க முடியாத கட்டத்திற்கு செல்லும். - என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

## முடிவு ஜனாதிபதியிடம் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சர்வகட்சிஇடைக்காலஅரசாங்கத்தை நியமிப்பதற்காக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை இராஜினாமா செய்யுமாறு கோரிய மகாநாயக்க தேரர்களின் யோசனையை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பௌத்த பிக்குகளின் சங்க சபா நேற்று கோரிக்கை விடுத்தமை குறிப்பிடத்தக்கது.

அதையடுத்தே இந்த தகவலை ஜனாதிபதிக்குத் பிரதமர் தெரிவித்திருக்கின்றார் எனக் கூறப்படுகின்றது.

## நாடளாவிய ரீதியில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பஸில் ராஜபக்ஷ உள்ளிட்ட முக்கியஸ்தர்களின் பங்குபற்றலின்றி நடக்கின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன - ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமனவின் மே தின கூட்டம் நுகேகொடையில் நடைபெறுகின்றது. மே தின கூட்டத்தை காலி முகத்திடலில் நடத்த பொதுஜன பெரமுனவினர் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தனர். எனினும் அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து இளைஞர்கள் காலி முகத்திடலை கடந்த 20 நாள்களுக்கு மேலாக ஆக்கிரமித்து தொடர் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்ற நிலையிலேயே கூட்டத்தை நுகேகொடையில் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நுகேகொடையில் இடம் பெறும் மே தினக் கூட்டத்தில் அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்களில் பெரும்பாலானோர் கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தி - எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ இன்று காலை 08.30 மணியளவில் புதுக்கடையில் உள்ள முன்னாள் அரச தலைவர் மறைந்த ரணசிங்க பிரேமதாஸவின் உருவசிலைக்கு மலர்மாலை அணிவித்து நினைவு கூரல் நிகழ்வு இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து இன்று பிற்பகல் 2.30 க்கு கொழும்பு - கெம்பல் மைதானத்திலிருந்து (கெம்பல் பார்க்) பேரணியாக சுதந்திர சதுக்கத்திற்கு சென்று அங்கு பிரதான கூட்டம் நடக்கின்றது.

மக்கள் விடுதலை முன்னணி - மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) இன்றைய தினம் 4 பிரதான நகரங்களில் மே தின கூட்டங்களை ஏற்பாடு செய்திருந்தது. அதற்கமைய காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத்திலும், மாலை 03 மணிக்கு கொழும்பு, மாத்தறை மற்றும் அநுராதபுரம் ஆகிய நகரங்களில் கூட்டம் இடம்பெற்றது. கொழும்பு மாளிகாவத்தையில் இருந்து பேரணியை ஆரம்பித்து கோட்டை ரயில் நிலையத்தை சென்றடைந்து அங்கு பிரதான கூட்டத்தை ஜே.வி.பி. நடத்துகின்றது.

ஐக்கிய தேசிய கட்சி - ஐக்கிய தேசிய கட்சி இம்முறை மே தின கூட்டத்தை நடத்தவில்லை. காலி முகத்திடலில் போராட்டத்தில் ஈடுபடுபவர்களுக்கு ஆதரவு வழங்கும் வகையில் கட்சியின் தலைமை காரியாலயமான சிறிகொத்தாவில் கறுப்பு கொடிகளை ஏற்றி அரசாங்கத்திற்கு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - மே தினத்தை முன்னிட்டு சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன 1,000 விவசாயிகளை ஒன்றிணைத்து பொலன்னறுவை சிடி சென்டர் நிலையத்திலிருந்து பொலன்னறுவை வைத்தியசாலை வரை பேரணியாக சென்றார். சுதந்திர கட்சியின் மாவட்ட உறுப்பினர்களுக்கும், கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்குமான சந்திப்பு கொழும்பில் இடம்பெற்றது.

இடதுசாரி கட்சிகள் - ஜனநாயக இடதுசாரி கட்சியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தலைமையில் இன்று பகல் ஹைட் - பார்க் மைதானத்தில் கூட்டம் இடம்பெறுகின்றது.

தேசிய சுதந்திர முன்னணி - தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸ தலைமையில் இன்று பகல் பத்தரமுல்லயில் உள்ள அபேகமவில் மே தின விசேட கூட்டம் இடம்பெறுகின்றது.

தமிழ் தேசிய கூட்டமைப்பு - மே தினத்தை முன்னிட்டு தமிழ் தேசிய கூட்டமைப்பின் மாபெரும் தமிழ் தேசிய மே தின கூட்டம் இன்று பகல் 2 மணிக்கு கல்லடி பாலத்திற்கு அருகாமையில் உள்ள மீனிசை சிறுவர் பூங்கா திடலில் இடம்பெறுகின்றது. வடக்கில் கிளிநொச்சியில் அது தனது கூட்டத்தை நடத்திக் கொண்டிருக்கின்றது.

**நமது பார்வை**
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## இதுதானோ கர்ம விதி?

நமது மூதாதையர்களின் தத்துவக் கருத்துக்கள் எவ்வளவு தூரம் தீர்க்கதரிசனமானவை, உண்மையானவை என்பதைக் குறுகிய காலத்திலேயே தரிசிக்கும் வாய்ப்பு நமக்குக் கிடைத்திருக்கின்றது.

'வினை விதைத்தவன் வினை அறுப்பான்.'

'வாள் எடுத்தவன் வாளால் அழிவான்.'

இந்த இரண்டுக்கும் அப்பால் பைபிளில் ஒரு வாசகம் உண்டு. 'நீ எதனால் அளக்கின்றாயோ அதனால் நீ அளக்கப்படுவாய்!'.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு இன்று ஏற்பட்டிருக்கும் இக்கட்டு இந்தப் பாடங்களை நமக்கு மீண்டும் புத்தி பூர்வமாக உணர்த்தி நிற்கின்றது.

புதிய மிலேனியத்தின் முதல் தசாப்தத்தின் நடுப்பகுதியில், ஜனாதிபதியாக இருந்த சந்திரிகா குமாரதுங்க கட்சியிலும் அரசிலும் தமக்கு அடுத்த நிலையை மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்குப் பின்னடித்தார். ராஜபக்ஷவின் செயற்போக்கு, அணுகுமுறை, விடயங்களைகையாளும்பண்பியல்போன்றவை நாட்டுக்கும் மக்களுக்கும் தீங்கு விளைவிக்கக் கூடியனவாக அமைந்து விடும் என்று கருதிய சந்திரிகா, அவரை முன் நிறுத்துவதை செயல்படுத்துவதற்குப் பின்னின்றார். அப்போது தமக்கு ஆதரவாக இதே பௌத்த மத பீடங்களை உசுப்பேற்றி களத்துக்கு இழுத்து வந்து இறங்கினார் மஹிந்தர்.

பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் பாதுகாவலனாக மஹிந்தவை உருவகப்படுத்தி, அவரை தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடியது பேரினவாதம்.

அதனால் – பௌத்த மத பீடங்களின் கடும் அழுத்தத்தினால் – வேறுவழியின்றி அடிபணிந்தார் சந்திரிகா. தமது உளமார்ந்த விருப்பமின்றியே மஹிந்தவைப் பிரதமராக்கினார். கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளராக அவரை அறிவிக்க வேண்டிய கட்டாயத்துக்கும் உள்ளானார்.

1959 செப்ரெம்பரில் அவரின் தந்தையார் எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்கா ஒரு பௌத்த பிக்குவினால் சுட்டுக் கொல்லப்பட்ட காலத்தின் பின்னர், அடுத்த நாற்பது, நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு இலங்கை அரசியலில் பௌத்த மத பீடம் சற்றுத் தள்ளி வைக்கப்பட்டிருந்தது. நேரடிப் பங்களிப்புக்கு இடமளிக்கப்படவில்லை.

ஆனால் அரசியலில் தன்னை ஸ்திரப்படுத்தி, தனக்கான பதவிகள் மற்றும் நிலைகளை எட்டுவதற்காக, தனக்கு ஆதரவாகப் பேரினவாதம் என்ற மூலோபாயத்தைக் கையிலெடுத்து, பௌத்த மத பீடத்தை இலங்கை அரசியலுக்குள் நேரடியாகத் தலையிட்டு செல்வாக்கு செலுத்தும் சக்தியாக இழுத்து வந்தார் மஹிந்தர்.

அந்த பௌத்த மதபீடமே இன்று அவரை அரசியலிலிருந்து கழுத்தைப் பிடித்துத் தள்ளும் அரும்பணியை வெளிப்படையாக – பகிரங்கமாக – வெட்டவெளிச்சமாக – முன்னெடுக்கின்றது.

விதைத்த வினையை அவர் இப்போது அறுக்க வேண்டியவராக இருக்கின்றார். தாம் அரசியலில் மேலெழுவதற்கு எந்தப் பேரினவாத ஆயுதத்தை கையில் எடுத்தாரோ அதனாலேயே வீழ்த்தப்படும் அவலம் அவருக்கு நேர்ந்திருக்கிறது. பைபிள் வாசகப்படி அவர் எதனால் அளந்தாரோ, அதனால் அவர் அளக்கப்படுகின்றார்.

விதியின் விளையாட்டு வலியது. பல சமயங்களில் விபரீதமானதும் கூட.

மஹிந்தவுக்கு (பாது)காப்பு என்று கருதி இவ்வளவு காலமும் பிரித் ஓதி, பிக்குகள் அவர் கையில் அவ்வப்போது கட்டிய கயிறுகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இன்று அவரின் அரசியல் வாழ்வின் கழுத்துக்குச் சுருக்குக் கயிறாக வந்திருப்பது விதியின் விளையாட்டன்றி வேறேது?

மஹிந்த ராஜபக்ஷ அரசியலில் மேலேறுவதற்கு தாங்கள் வழங்கிய ஆசீர்வாதங்களை எல்லாம் அவரை வீழ்த்துவதற்கான சாபங்களாக்க வேண்டிய துஷ்ட நிலைமை – துரதிஷ்ட நிலைமை பௌத்த பிக்குகளுக்கு.

பௌத்தம் கூறும் கர்ம விதி என்பது இதுதானோ?

# பவுஸர் உரிமையாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு மாற்று வழியூடாக எரிபொருள் விநியோகம்

## வலுசக்தி அமைச்சர் அதிரடி

எரிபொருள் விலை அதிகரிப்பிற்கேற்ப போக்குவரத்து கட்டணங்கள் அதிகரிக்கப்படாமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இலங்கை பெற்றோலிய தனியார் பவுஸர் உரிமையாளர்கள் சங்கம் நேற்று (சனிக்கிழமை) நள்ளிரவு முதல் பணிபகிஷ்கரிப்பை முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டடுள்ளது.

எவ்வாறிருப்பினும் தனியார் எரிபொருள் பவுஸர்கள் சேவையில் இருந்து விலகினால், அரசாங்கத்துக்கு சொந்தமான பவுஸர்கள் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் பவுஸர்கள் மூலம் எரிபொருள் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் விலை அதிகரிப்பை அடிப்படையாகக் கொண்டு தமக்கான போக்குவரத்து கட்டணத்தையும் 60 சதவீதத்தால் அதிகரிக்குமாறு இந்த சங்கம் கோரிக்கை விடுத்திருந்தது.

எவ்வாறிருப்பினும் இது தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சருடன் இடம்பெற்ற கலந்துரையாடல் தீர்வின்றி நிறைவடைந்தமையால் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர , எரிபொருள் போக்குவரத்து நடவடிக்கைள் 3 துறைகளால் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசுக்கு சொந்தமானது, எரிபொருள் நிலைய உரிமையாளர்கள் பவுஸர்கள் மற்றும் தனியார் பவுஸர்கள் என்பன அம்மூன்றுமாகும்.

கடந்த ஆண்டு ஜூலை முதல் இது வரையில் கட்டணங்கள் 5 முறை மாற்றப்பட்டுள்ளன.

அனைவரும் ஒப்புக்கொண்ட சூத்திரத்தைப் பயன்படுத்தி 84 சதவீத அதிகரிப்பு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில்லும் தனியார் பணியாளர்கள் வேலைநிறுத்தம் செய்தால், நாங்கள் மற்ற 2 துறைகளைப் பயன்படுத்தி எரிபொருளை தடையின்றி விநியோகிப்போம். – என்று குறிப்பிட்டுள்ளார்.







# றாகலையில் இருந்து காலிமுகத்திடலை நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்தார் மரதன் ஓட்ட வீரர்!

உடபுசல்லாவை சேர்ந்த மரதன் ஓட்ட வீரரான மணிவேல் சத்தியசீலன் நேற்று (சனிக்கிழமை) காலை 09.30 மணியளவில் றாகலையில் இருந்து கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

அவர், நாட்டில் தற்போது நிலவி வரும் பிரச்சினைகளுக்கு அரசு உடனடியாகத் தீர்வு வழங்க வேண்டும், உரப்பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினை, எரிவாயு மற்றும் பொருள்களின் விலை உயர்வு போன்ற பிரச்சினைகளுக்கு அரசு தீர்வு வழங்க வேண்டும் என வலியுறுத்தி றாகலையில் மத வழிபாடுகளின் பின்னர் நுவரெலியா , ஹற்றன், கினிகத்தனை, அவிசாவளை வழியாக கொழும்பு காலிமுகத்திடலை நோக்கி நடைபயணத்தை ஆரம்பித்துள்ளார்.

இந்தநடைபயணத்தைமேற்கொண்டுள்ள சத்தியசீலனை மக்கள் உற்சாகப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அம்பலாங்கொடையில் ரயில் மோதி இரு பாடசாலை மாணவிகள் காயம்

நேற்று (சனிக்கிழமை) காலை இரண்டு பாடசாலை மாணவிகள் ரயிலில் மோதி விபத்துக்கு உள்ளாகி இருந்தனர்.

அம்பலாங்கொடை குலரத்ன பாலம் பகுதியில் இந்த சம்பவம் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த மாணவி ஒருவர் பலபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மற்றைய மாணவியும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று காலை இரண்டு மாணவிகளும் தண்டவாளத்தில் பயணித்துக் கொண்டிருந்தபோது ரயில் ஒன்று வருவதை அவதானித்த மாணவிகள் தண்டவாளத்தை விட்டு வெளியேற முற்பட்ட போது ரயிலில் மோதியுள்ளனர்.

17 வயதுடைய இரு மாணவிகளும் நேற்று காலை மேலதிக வகுப்பில் கலந்து கொள்வதற்காகச் சென்று கொண்டிருந்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# சர்வதேசநாணயநிதியத்திடம் அவசர நிதியுதவி கோரிக்கை!

அவசர நிதி உதவிக்காக சர்வதேச நாணய நிதியத்திடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நிதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்றி தலைமையிலான இலங்கைக்குழு வொஷிங்டனுக்கு விஜயம் செய்திருந்த போதே இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தின் தற்போதைய நிலை தொடர்பாக இங்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

குறுகிய மற்றும் நடுத்தர கால, உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டிய கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள் தொடர்பாகக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டன என நிதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. எரிபொருள், எரிவாயு மற்றும் மருந்துப் பொருள்கள் உள்ளிட்டவற்றின் விநியோகத்தை வழமைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக, இலங்கை பிரதிநிதிகள் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாடியுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# உக்ரைனில் ஒரு பக்கம் பேச்சு மற்றொரு பக்கம் குண்டுமழை

## ஒரே இரவில் 389 ராணுவ தளங்கள் மீது ரஷ்யா தாக்குதல்



போர் நிறுத்தம் தொடர்பாக ரஷ்யா ஒரு பக்கம் பேச்சு நடத்தி கொண்டே, மறுபக்கம் தாக்குதல் நடத்தி வருவதால், உக்ரைனின் பல பகுதிகளில் குடியிருப்புகள், ராணுவ தளங்கள் பற்றி எரிகின்றன. நேட்டோ அமைப்பில் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது கடந்த பெப்ரவரி 24ம் திகதி ரஷ்யா போர் தொடுக்க தொடங்கியது. போர் நிறுத்தம் தொடர்பாக அவ்வப்போது இருநாட்டு பிரதிநிதிகளும் பேச்சு நடத்தினர். பல்வேறு நாட்டு அதிபர்கள், பிரதமர்கள், ஐ.நா. பொதுச்செயலாளர் ஆகி யோர் ரஷ்ய அதிபர் புடின் மற்றும் உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கியுடன் போனிலும், நேரிலும் பேசி போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சி செய்தனர்.

அப்போது, மக்களை மனிதநேய பாதையில் பாதுகாப்பாக வெளியேற்றுவது, படைகளை வாபஸ் செய்வது போன்ற வாக்குறுதிகளை ரஷ்யா கொடுத்தது. ஆனால், ரஷ்யா தான் அளித்த வாக்குறுதியை காப்பாற்றாமல், உக்ரைன் தலைநகர் கீவ், மரியுபோல் உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மற்றும் கிழக்கு, தெற்கு உக்ரைனில் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது. ரஷ்யாவின் அத்துமீறல் காரணமாக மேற்கு நாடுகளின் ஆயுத உதவிகள் மூலம் ரஷ்யாவுக்குள் புகுந்து உக்ரைன் அதிரடி தாக்குதல் நடத்தியது.

கடந்த சில வாரங்களுக்கு முன் எல்லையில் இருந்து சுமார் 10 கி.மீ. தூரம் ரஷ்யாவுக்குள் புகுந்து தாக்குதல் நடத்திய உக்ரைன், கடந்த சில நாள்களுக்கு முன் சுமார் 300 கி.மீ. தூரம் ரஷ்யாவுக்குள் புகுந்து 3 மாகாணங்கள் மீது டிரோன் மூலம் குண்டுவீசி தாக்குதல் நடத்தியது. இதனால், ஆத்திரமடைந்த ரஷ்யா, நேற்று முன்தினம் ஐ.நா.பொதுச் செயலாளர் அன்டோனியா குட்டரெஸ் உக்ரைனில் தலைநகர் கீவ்வில் அதிபர் ஜெலன்ஸ்கியை சந்தித்து பேசி கொண்டிருக்கும்போது கூட, கீவ் நகர குடியிருப்புகள் மீது ஏவுகணைகளை வீசி தாக்குதல் நடத்தியது. இதில் பல குடியிருப்புகள் தீப்பற்றி எரிந்தன.

இந்த பகுதிகளில் இன்னும் மீட்பு பணிகள் நடந்து வருகிறன. கார்கிவ்வில் ரஷ்யா நடத்திய தாக்குதலில் 20 சதவீத குடியிருப்பு கட்டடங்கள் மிகவும் மோசமாக சேதமடைந்து உள்ளன. இந்நிலையில், உக்ரைனின் பல்வேறு பகுதிகளில் உள்ள 389 ராணுவ தளங்கள் மீது ரஷ்யா நேற்று முன்தினம் இரவு அதிரடி தாக்குதல் நடத்தி உள்ளது. கடந்த வாரம் ஒரே இரவில் 423 இடங்களை அது தாக்கியது. தற்போது, தெற்கு, கிழக்கு உக்ரைன் மற்றும் மரியுபோலை கைப்பற்ற ரஷ்யா தீவிர தாக்குதல் நடத்தி வருகிறது.

இங்குள்ள சில நகரங்களில் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. இதனால், பல குடியிருப்புகள், ராணுவ தளங்கள் தீப்பற்றி எரிகிறன. சைரன்கள் ஒலித்து கொண்டே இருந்தது. குறிப்பாக, மரியுபோல் தொழிற்சாலையில் சிக்கி உள்ள மக்களை வெளியேற்றும் முயற்சி தொடர்ந்து தோல்வியை தழுவி வருகிறது. தங்களை காப்பாற்றும்படி இந்த மக்கள் கெஞ்சி வருகின்றனர். ஆனால், ரஷ்ய படைகள் அவர்கள் வெளியேறுவதை தடுக்கும் வகையில் தொடர்ந்து தாக்குதல் நடத்திக் கொண்டே இருக்கிறது.

### டான்பாஸ், மக்களை அழிக்க ரஷ்யா முயற்சி

உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி கூறுகையில், 'தொடர்ச்சியான மிருகத்தனமான குண்டுவீச்சுகள், உள்கட்டமைப்பு மற்றும் குடியிருப்புப் பகுதிகள் மீதான தாக்குதலால், டான்பாஸ் மற்றும் அங்கு வசிக்கும் அனைவரையும் அழிக்க ரஷ்யா முயற்சிக்கிறது. இது, வாழ்க்கைக்கான போராட்டம். உக்ரைன் நிலைத்து நின்றால்தான் டான்பாஸ் நகரங்களும் நிலைத்திருக்கும்,' என தெரிவித்தார்.

### போர் நிறுத்தத்திற்கு நேட்டோ தடை

உக்ரைனின் வலிமையான பதிலடி காரணமாக ரஷ்யாவின் தாக்குதல் திட்டமிடப்பட்டதை விட மிகவும் மெதுவாக செல்கிறது என்று மூத்த அமெரிக்க பாதுகாப்பு அதிகாரி கூறினார்.

கீவ் அருகே உள்ள பகுதிகளில் ரஷ்ய படைகள் அட்டூழியங்கள் செய்தன என உக்ரைன் கூறியுள்ள குற்றச்சாட்டை ரஷ்யா மறுத்துள்ளது.

உக்ரைன் படைகள் கார்கிவ் அருகே உள்ள ருஸ்கா லோசோவா கிராமத்தை மீண்டும் கைப்பற்றியதாகவும், நூற்றுக்கணக்கான பொதுமக்களை வெளியேற்றியதாகவும் தகவல் வெளியாகி உள்ளது.

ரஷ்யா வெளியுறவுத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறுகையில், 'உக்ரைன் போரை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான அரசியல் தீர்வை எட்டுவதில், நேட்டோ நாடுகள் தடையாக உள்ளன' என்று தெரிவித்துள்ளார்.

### முதல் நாளிலேயே ஜெலன்ஸ்கியை கொல்ல முயற்சி

உக்ரைன் அதிபரின் தலைமை அதிகாரி ஆண்ட்ரி யெர்மக் அமெரிக்க இதழுக்கு அளித்த பேட்டியில், 'பெப்ரவரி 24 அதிகாலை உக்ரைனை ரஷ்யா ஆக்கிரமித்த நேரத்தில், அதிபர் ஜெலனஸ்கியையும், அவரது குடும்பத்தினரையும் கொல்ல அல்லது உயிருடன் பிடிப்பதற்காக ரஷ்ய படைகளின் சிறப்பு குழுக்கள் கீவ்வுக்குள் பாராசூட் மூலம் நுழைந்தனர்.

அன்று இரவு நடந்த காட்சிகள், நாங்கள் திரைப் படத்தில் மட்டுமே பார்த்துள்ளோம். அப்போது, ஜெலன்ஸ்கி, அவரது மனைவி ஓலேனா ஜெலென்ஸ்கா, அவருடைய 17 வயது மகள் மற்றும் 9 வயது மகனை ரஷ்ய படைகள் சுற்றிவளைத்தனர். அவர்களிடம் இருந்து போராடி முதலில் ஜெலன்ஸ்கியை மீட்டோம். பின்னர், அவரது குடும்பத்தினரை மீட்டோம்,' என்று கூறியுள்ளார்.



# 'கீவ்வின் பேய்' உயிரிழப்பு

*உக்ரைனின் துணிச்சலான போர் விமானி மேஜர் ஸ்டீபன் தரபால்கா (29). ஒரு குழந்தைக்கு தந்தையான இவர் 'கோஸ்ட் ஆப் கீவ்' (கீவ்வின் பேய்) என்று அழைக்கப்பட்டவர். தற்போது ரஷ்யா உடனான போரில், அந்நாட்டின் போர் விமானங்களுக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார். கடந்த மார்ச் 13ஆம் திகதி மிக்-29 ரக விமானத்தில் ரஷ்யாவுக்கு எதிராக சண்டையிட்டபோது, தரபால்கா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதில் அவர் உயிரிழந்தார்.*

*இதுதொடர்பாகலண்டன்டைம்ஸ்வெளியிட்டுள்ள செய்தியில், உக்ரைன் போர் விமானி தரபால்கா கடந்த மாதம் 40 ரஷ்ய போர் விமானங்களை சுட்டு வீழ்த்திய பின்னர் போரில் கொல்லப்பட்டுள்ளார். இவருக்கு போரில் துணிச்சலுக்கான உக்ரைனின் சிறந்த பதக்கமான 'ஆர்டர் ஆப் தி கோல்டன் ஸ்டார்' வழங்கப்பட்டது. உக்ரைனின் ஹீரோ என்ற பட்டமும் வழங்கப்பட்டது. இவரது ஹெல்மெட் மற்றும் கண்ணாடிகள் இப்போது லண்டனில் ஏலம் விடப்பட உள்ளன. படையெடுப்பின் முதல் நாளில் 10 ரஷ்ய விமானங்களை சுட்டு வீழ்த்திய பின்னர் தராபால்கா உலகளவில் புகழ் பெற்றார்,' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.*

# பாகிஸ்தானில் மீண்டும் தலை தூக்கும் போலியோ ஒரே ஊரில் 2 குழந்தைகள் பாதிப்பு

பாகிஸ்தானில் பல ஆண்டுகளுக்கு பிறகு போலியோ நோய் மீண்டும் தலைதூக்கியுள்ளமை மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தி உள்ளது. போலியோ என்னும் இளம்பிள்ளை வாத நோய் குழந்தைகளை தாக்குகிறது. இந்த நோயை ஏற்படுத்தும் போலியோ வைரஸ், சுற்றுப்புற சுகாதார சீர்கேட்டால் உருவாகிறது. உலக சுகாதார அமைப்பின் தகவல்களின்படி, கடந்த 1988ம் ஆண்டு 3,50,000 ஆக இருந்த போலியோ நோயாளிகளின் எண்ணிக்கை, சில ஆண்டுகளுக்கு முன் 99% க்கும் கீழாக குறைந்து விட்டதாக தெரிவிக்கப்பட்டது.



பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் நைஜீரியா ஆகிய மூன்று நாடுகளில் மட்டுமே தற்போது போலியோ பரவுவதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பாகிஸ்தானின் கைபர் பக்துன்வா மாகாணத்தில் 2 வயது குழந்தைக்கு போலியோ பாதிப்பு இருப்பது மருத்துவ பரிசோதனையில் உறுதி செய்யப்பட்டது. சில நாள்களுக்கு முன் அதே மாகாணத்தைச் சேர்ந்த 15 மாத குழந்தையையும் இந்த நோய் தாக்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. மீர் அலி என்ற இடத்தை சேர்ந்த இந்த இரு குழந்தைகளையும் டைப் 1 போலியோ தாக்கி உள்ளது. இதனால் மக்கள் பீதியில் உள்ளனர்.

# கொரோனா உயிறப்பு 62 லட்சத்தைத் தாண்டியது



உலகம் முழுவதும் கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 62.60 லட்சத்தை தாண்டியது. பல்வேறு நாடுகளை சேர்ந்த 62,60,333 பேர் கொரோனா வைரஸால் உயிரிழந்தனர். உலகம் முழுவதும் கொரோனாவால் 51,32,29,643 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் 46,70,96,884 பேர் குணமடைந்துள்ளனர். மேலும் 41,131 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

# தமிழ்நாட்டில் எவ்வித குறையும் இன்றி தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனவாம்



அமைச்சர் தெரிவிப்பு

தமிழ்நாட்டில் எவ்வித குறையும் இன்றி தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியை தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன என ஓ.பி.எஸ்க்கு அமைச்சர் தங்கம் தென்னரசு பதிலளித்துள்ளார். இது தொடர்பாக தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் சென்னைக்கு அருகே இயங்கி வரும் நிசான் கார் தொழிற்சாலை தன்னுடைய கார் உற்பத்தியை நிறுத்தி, அத்தொழிற்சாலையை மூடப்போகும் சூழல் உருவாகி இருப்பதாகவும் அதன் காரணமாக பெருமளவில் வேலை இழப்பும், தமிழ்நாடு அரசுக்கு வருவாய் இழப்பும் நேரவிருப்பதாகவும் தெரிவித்து அ.தி.மு கவின் ஒருங்கிணைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் அறிக்கை ஒன்றை விடுத்திருந்தார்.

ஓ. பன்னீர்செல்வம் அவர்களது அறிக்கை, தமிழ்நாடு அரசின் மீது ஏதாவது ஒரு வகையில் குற்றம் சுமத்த வேண்டும் என்ற நோக்கத்தில் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளதால் உண்மை நிலையினை விளக்க வேண்டியது எனது கடமையாகும். திருவாளர்கள். ரெனால்ட் நிசான் நிறுவனத்திற்கு, பயணிகள் கார், எரிவாயு டீசல் எஞ்சின் மற்றும் கியர் பாக்ஸ் போன்றவற்றை உற்பத்தி செய்யும் பொருட்டுக் கழக ஆட்சியில்தான் 2008 ம் ஆண்டு சென்னைக்கருகே ஒரகடம் தொழில் பூங்காவில் சுமார் 610 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டது. அந் நிறுவனமும் கழகம் ஆட்சிப் பொறுப்பில் இருந்த காலத்திலேயே 1-1-2010 அன்று தனது வணிக உற்பத்தியினைத் தொடங்கி இன்றளவும் சிறப்பாக செயல்பட்டு வருகின்றது.

ரெனால்ட் நிசான் நிறுவனம் மேற்குறித்த உற்பத்தி நிலையத்தில் உள்நாட்டு வாடிக்கையாளர்களின் தேவைகளை நிறைவு செய்யும் வண்ணம் பல்வேறு ரக பயணியர் வாகனங்களைத் தயாரிப்பதோடு, உலகளவில் 15க்கும் மேற்பட்ட ஏற்றுமதி சந்தைகளுக்குமான சேவைகளையும் வழங்கி வருகின்றது. அண்மையில் இந் நிறுவனம் தனது 50,000 மவது மேக்னைட் எஸ்யூவி ரக காரினை வெற்றிகரமாகத் தயாரித்திருக்கின்றது. இந்நிலையில், தனது தயாரிப்பில் உருவாகும் பல்வேறு வகையான கார்களைச் சந்தை நிலைவரத்திற்கு ஏற்ப சீர்திருத்தும் நோக்கத்துடன், டாட்சன் வகைக் கார்களின் உற்பத்தியைக் குறைத்துக் கொண்டு புதிய வகைக் கார்களை உற்பத்தி செய்யவிருப்பதாக அறிக்கை ஒன்றின் வாயிலாக ரெனால்ட் நிசான் நிறுவனம் தெரிவித்திருக்கின்றது.

உலகளாவிய சந்தை நிலைவரப்படி செமி கண்டக்டர்களின் தட்டுப்பாடு நிலவி வந்தாலும், இந்நிறுவனம் தனது உற்பத்தியை சீரான நிலையில் வைத்திருப்பதாகவும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கான தேவைகளை ஒரகடத்தில் உள்ள தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்களைக் கொண்டே நிறைவு செய்வதாகவும், தெரிவித்திருக்கின்றது. தமிழ்நாட்டில் தனது செயல்பாடுகளை வெற்றிகரமாகத் தொடர்ந்து செய்ய உறுதி பூண்டுள்ளதாகவும் ரெனால்ட் நிசான் நிறுவனம் மேலும் தெளிவாகத் தெரிவித்திருக்கிறது.

எனவே, ரெனால்ட் நிசான் தொழிற்சாலை மூடப்படும் சூழல் உருவாகிடக் கூடும் என்ற திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களின் கூற்று முற்றிலும் கற்பனைகளால் வடிவமைக்கப்பட்ட அனுமானமே தவிர அடிப்படை ஆதாரமற்றதாகும். தொழிற்சாலை தொடர்ந்து இயங்கும் சூழலில், அங்கே பணிபுரியும் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்படும் எனக் கூறுவதும் உண்மைக்கு மாறானதாகும். அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் தான் நோக்கியா செல்போன் தொழிற்சாலை மூடப்பட்டது என்பதும், பல்லாயிரம் தொழிலாளர்கள் வேலை இழந்தார்கள் என்பதும் யாராலும் மறுக்க முடியாத உண்மைகள்.

அது மாத்திரமல்ல, தமிழ்நாட்டில் தனது கார் தயாரிப்புத் தொழிற்சாலையை நிறுவிட விரும்பிய கியா மோட்டார்ஸ் நிறுவனம் இறுதியில் தமிழ்நாட்டை விட்டுவிட்டு அண்டை மாநிலமான ஆந்திரப் பிரதேசத்திற்கு சென்று தொழில் தொடங்க வேண்டிய நிலை உருவாக்கப்பட்டதும் அ.தி.மு.க. ஆட்சியில் தான் என்பதையும் தமிழ்நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. எனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலில், தமிழ்நாட்டில் எவ்விதக் குறையும் இன்றித் தொழில் நிறுவனங்கள் தங்கள் உற்பத்தியினைத் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றன என்பதனையும் தமிழ்நாடு முதலமைச்சர் மீது கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கையின் காரணமாகவே உலகின் மிகப் பெரும் நிறுவனங்களின் முதலீடுகளைப் பெருமளவில் ஈர்க்கும் மாநிலமாகத் தமிழ்நாடு உருவெடுத்திருக்கின்றது என்பதனையும் இதன் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# வெறுப்பு அரசியலுக்கு முடிவு கட்டுமாறு பிரதமர் நரேந்திரமோடிக்கு கடிதம்

## ஓய்வு பெற்ற நீதிபதிகள், உயரதிகாரிகள் வலியுறுத்தல்

வெறுப்பு அரசியலுக்கு முடிவு கட்டுமாறு முன்னாள் நீதிபதிகளும், உயரதிகாரிகளும் பிரதமர் மோடியை வலியுறுத்தியுள்ளனர். டெல்லி முன்னாள் துணைநிலை ஆளுநர் நஜீப் ஜங், முன்னாள் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன், முன்னாள் வெளியுறவுத்துறை செயலாளர் திருமதி சுஜாதா சிங், மற்றும் முன்னாள் நீதிபதிகள் உள்ளிட்ட 108 பேர் இது தொடர்பாக பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், அண்மை காலமாக நாட்டில் வெறுப்புகள் மட்டுமே நிறைந்த ஒரு வெறித்தனத்தை காண்கிறோம் என குறிப்பிட்டுள்ளனர்.

இஸ்லாமியர்கள் உள்ளிட்ட சிறுபான்மை சமூகங்கள் மட்டுமல்ல நாட்டில் அரசியல் அமைப்பு சட்டமே பலிபீடத்தில் வைக்கப்பட்டது போல் உள்ளதாக தெரிவித்துள்ள அவர்கள், இந்த சமூக அச்சுறுத்தலுக்கு எதிரான உங்கள் மௌனம் காது கேளாதது போல உள்ளது-என்று தெரிவித்துள்ளனர். பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் இந்த வெறுப்பு அரசியல் புதிய பரிமாணத்தை பெற்றிருப்பதாக கூறியுள்ள முன்னாள் நீதிபதிகளும் அதிகாரிகளும், அரசியல் அமைப்பின் தனித்துவம் சிதைக்கப்படாமல் காக்கும் பொறுப்பு



பிரதமருக்கு இருப்பதாக தெரிவித்தனர்.

கடிதத்தில் கையெழுத்திட்டிருப்போர் தங்களை அக்கறை உள்ள குடிமக்கள் என்று குறிப்பிட்டு இருப்பதோடு அதன் பின்னணியில் எந்த வித உள்நோக்கமும் இல்லை என கூறியுள்ளனர். முன்னாள் அரசு ஊழியர்களான தாங்கள் வழக்கம் போல இத்தகைய கடின வார்த்தைகளை பயன்படுத்துவது இல்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அவர்கள் அரசியல் சாசனத்தின் தனித்துவம் சிதைக்கப்படும் போது கோபம் மற்றும் வேதனையை வெளிப்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு இருப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.




## இந்தியாவில் கடந்த 24 மணி நேரத்தில் 40 பேர் தொற்றால் உயிரிழப்பு

இந்தியாவில் கொரோனாவால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 5 லட்சத்தை தாண்டியது. அதே போல், பாதிப்பு 4 கோடியை தாண்டியது. இன்று காலை 9 மணி யுடன் முடிந்த 24 மணி நேரத்தில், நாட்டில் கொரோனாவால் புதிதாக பாதிக்கப்பட்டவர்கள், குணமடைந்தோர், பலியானோர், இறப்பு விகித நிலைவரம் குறித்து மத்திய சுகாதார அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

அதன்படி கடந்த 24 மணி நேரத்தில் 40 பேர் கொரோனவால் உயிரிழந்துள்ளனர். 3, 324 பேருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ள மையுடன் 2,876 பேர் தொற்றிலிருந்து குணமடைந்து வீடு திரும்பியுள்ளர்.

# மக்களின் தேவையை உள்ளடக்கிய சட்டங்களை இயற்ற வேண்டும்! சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி ரமணா வலியுறுத்தினார் இன்று

டெல்லியில் நடந்த 39வது உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாநாட்டில் பேசிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா, 'மக்களின் தேவையை உள்ளடக்கிய சட்டங்களை இயற்ற வேண்டும்' என்று வலியுறுத்தினார். தலைநகர் டெல்லியில் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி என்.வி.ரமணா தலைமையில் 39வது தலைமை நீதிபதிகளின் மாநாடு இன்று நடைபெற்றது. 25 உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் மாநாட்டில் பங்கேற்றனர். இம்மாநாட்டில் உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் முதல் நீதிமன்ற வளாகத்தில் காணப்படும் உள்கட்டமைப்பு பிரச்சினைகள் வரையிலான கலந்துரையாடல்கள் உள்ளிட்டவை குறித்து பேசப்பட்டன. தொடர்ந்து மாநில முதல்வர்கள், தலைமை நீதிபதிகள் பங்கேற்கும் மாநாடு விஞ்ஞான் பவனில் நடைபெற்றது. பிரதமர் மோடி மாநாட்டை தொடங்கி வைத்தார்.



மேற்கண்ட இரு மாநாடுகளும் கிட்டத்தட்ட 6 ஆண்டுகள் கழித்து நடைபெற்றன. இம்மாநாட்டில் ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜ், டெல்லி முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால், மேற்குவங்க முதல்வர் மம்தா பானர்ஜி, உத்தரபிரதேச முதல்வர் யோகி ஆதித்ய நாத், சட்டீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகேல், அசாம் முதல்வர் ஹிமந்தா பிஸ்வா சர்மா, அருணாச்சல பிரதேச முதல்வர் பெமா காண்டு, மேகாலயா முதல்வர் கான்ராட் சங்மா, பஞ்சாப் முதல்வர் பகவந்த் மான் உள்ளிட்ட மாநில முதல்வர்கள் கலந்து கொண்டனர். தமிழகத்தின் சார்பில் மாநில சட்டத்துறை அமைச்சர் ரகுபதி பங்கேற்றார்.

மாநாட்டில் ஒன்றிய சட்டத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜ் பேசுகையில், 'நீதியை வழங்குவதற்காக, அரசுக்கும் நீதித்துறைக்கும் இடையே நேர்மையான மற்றும் ஆக்கபூர்வமான உரையாடலுக்கு இந்த மாநாடு உதவும்' என்றார். தொடர்ந்து பிரதமர் மோடி பேசுகையில், 'டிஜிற்றல் இந்தியா திட்டமானது நீதித்துறையின் ஒரு அங்கமாக செயல்படுகிறது. இ-கோர்ட் திட்டம், டிஜிற்றல் இந்தியா மூலம் செயல்படுத்தப்படுகிறது. நீதித்துறையை மேம்படுத்த எங்களால் முடிந்த அனைத்தையும் செய்து வருகிறோம். நீதித்துறை உள்கட்டமைப்புகளை மேம்படுத்த தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். நீதிமன்றங்களில் உள்ளூர் மொழிகளை ஊக்குவிக்க வேண்டும். இதனால் சாமானிய மக்களுக்கு நீதித்துறை மீதான நம்பிக்கை அதிகரிக்கும். கடந்த 2015ம் ஆண்டில் எடுக்கப்பட்ட புள்ளிவிவரங்களின்படி பயன்பாடற்ற மற்றும் நடைமுறையில் இல்லாத 1,800 சட்டங்களை கண்டறிந்தோம்.

இவற்றில் 1,450 சட்டங்களை ஒன்றிய அரசு ரத்து செய்தது. 75 சட்டங்களை மாநிலங்கள் ரத்து செய்துள்ளன' என்றார். முன்னதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா பேசுகையில், பொது நல வழக்குகளின் பின்னால் உள்ள நல்ல நோக்கங்கள் சில நேரங்களில் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. ஏனெனில் இதுபோன்ற வழக்குகள் தனிப்பட்ட நலன் சார்ந்த வழக்குகளாக மாற்றப்படுகின்றன. இவை பொது அதிகாரிகளைப் பயமுறுத்தும் வகையில் உள்ளது. அரசியல் மற்றும் கார்ப்பரேட் போட்டியாளர்களிடையே சுய தேவையை தீர்மானிக்கும் கருவியாக மாறியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மடத்தடியில் சிறப்புற நடந்தன கலாசார, பாற்குடப் பவனிகள்

(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நிந்தவூர் மடத்தடி ஸ்ரீமீனாட்சி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகத்தை அடுத்து நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை ஆன்மீக கலாசார பவனியும் பால்குட பவனியும் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை காலை கல்முனை, காரைதீவு, அட்டப்பள்ளம் மற்றும் திருக்கோவில் அக்கரைப்பற்று பகுதிகளிலிருந்து புறப்பட்ட ஆன்மீக கலாச்சார நடைபவனிகள் எட்டு மணி அளவில் மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தை வந்தடைந்தன. ஆலயத்தின் மேற்கு கும்பாபிஷேக மன்று பிரதிஷ்டை செய்யப்பட்ட சிவலிங்க பீடத்தில் பவனிக்கான பால் வழங்கப்பட்டு அங்கிருந்து வயல்வெளி ஊடாக பால்குட பவனி இடம்பெற்றது.

சிவலிங்க பீடத்தில் அவர்களுக்கான பால் வழங்கப்பட்டு ஊர்வலம் நேராக ஆலயத்தை கோலாட்டம், கும்மி, காவடி சகிதம் வந்தடைந்தது.

ஆலயத்தில் 10 மணியளவில் அம்மனுக்கு பால் சொரிந்தலுடன் விசேட பூஜை ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில் இடம்பெற்றது.



# அக்கரைப்பற்று விபத்தில் இருவர் சாவு; ஒருவர் காயம்

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவிற்–குட்பட்ட பனங்காடு பிரதேசத்தில் பனங்காடு பாலத்தின் அருகே நேற்று முன்தினம் இரவு வேளையில் இடம்பெற்ற விபத்தில் இருவர் பலியாகினர். ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்தில் விநாயகபுரத்தை சேர்ந்த இருவர் பலியாகினர். பனங்காடு பிரதேசத்தை சேர்ந்த இளம் குடும்பஸ்தர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். வேகத்தை கட்டுப்படுத்த முடியாத நிலையில் வீதியின் அருகே இருந்த தூண் ஒன்றில் மோட்டார் சைக்கிள் மோதியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான விசாரணையை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# சாய்ந்தமருது வைத்தியசாலையில் மார்பு சிகிச்சை நிலையம் திறப்பு

(நூருல் ஹுதா உமர்)

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகரித்து–வரும் காச நோயாளர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்துவதற்கு கல்முனை பிராந்திய மார்பு சிகிச்சை நிலையம் துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஷின் வழிகாட்டலுக்கு அமைய பிராந்திய மார்பு சிகிச்சை நிலைய பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.எச்.திலிப்மபாஸ் இதற்கான திட்டங்களை முன்னெடுத்துள்ளார். இதற்கமைய சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் மார்பு சிகிச்சை நிலையத்தின் பிரிவு ஒன்று புதிதாக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இங்கு நீண்டகால சுவாச நோய்களால் பாதிக்கப்பட்ட அனைத்து நோயாளிகளும் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு 3 வது வாரத்தில் விஷேட சிகிச்சைக்கு உட்படுத்தப்பட உள்ளனர்.

# நாவற்சோலை வைத்தியசாலைக்கு கிழக்கு ஆளுநர் குழு நேரில் வருகை



(பைசல் இஸ்மாயில்)

திருகோணமலை – நாவற்சோலை பஞ்சகர்ம ஆயுள்வேத வைத்தியசாலைக்கு கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் உள்ளிட்ட குழுவினர் விஜயமொன்றை மேற்கொண்டனர்.

ஆளுநர் நாவற்சோலை வைத்தியசாலையைப் பார்வையிட்டமையுடன் அங்குள்ள நிலைமைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பில் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்தியர் சாமஸ்ரீ தேசகீர்த்தி (திருமதி) இ.ஸ்ரீதரிடம் கேட்டறிந்துகொண்டார். வைத்தியசாலையின் பொறுப்பதிகாரியும், சுதேச மருத்துவ திணைக்கள திட்டமிடல் பிரிவின் வைத்திய அதிகாரியுமான வைத்தியர் எஸ்.சதீஸ் உள்ளிட்ட பலர் இதில் பங்கேற்றிருந்தார்.

# கல்முனையில் உதவி வழங்கல்



நூருல் ஹுதா உமர்

கல்முனை கிறீன் பீல்ட் வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் கணவனை இழந்த விதவைகளுக்கான உலர் உணவுப்பொதிகள் வழங்கும் முகமாக கிறீன் பீல்ட் முஹைதீன் மஸ்ஜித் பள்ளிவாசல் நிருவாகத்தினரால் மிகவும் தெளிவாக அடையாளப்படுத்தப்பட்ட கணவனை இழந்த 100 பயனாளிகளுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு கல்முனை மாநகர சபை பிரதி முதல்வரும், கல்முனை ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் ஸ்தாபகத் தலைவருமான ரஹ்மத் மன்சூர் தலைமையில் கல்முனை கிறீன் பீல்ட் ரோயல் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் மாநகர சபை பிரதி முதல்வர் ரஹ்மத் மன்சூர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இலங்கைக்கான இந்தியத் துணைத் தூதரகத்தின் இரண்டாம் நிலைச் செயலாளர் வீ.அஷோக்குமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்டத்தின் பல பாகங்களிலும் ரஹ்மத் பவுண்டேஷன் அமைப்பின் மூலம் பல வகையான மனித நேயப்பணிகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் பிரதேச சபையில் கறுப்புப் பட்டியுடன் எதிர்ப்பு



(பாறுக் ஷிஹான்)

அரசாங்கத்தின் செயற்பாடுகள், மின்சார தடை மற்றும் அத்தியாவசிய பொருள்களின் விலை ஏற்றம் போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும், அரசுக்கு எதிரான மக்களின் போராட்டத்திற்கு ஆதரவாகவும் நிந்தவூர் பிரதேச சபை உறுப்பினர்கள் கறுப்புப் பட்டி அணிந்து சபை அமர்வில் கலந்துகொண்டிருந்தனர்.

அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பிரதேச சபையின் 49 ஆவது கூட்ட அமர்வு கடந்த வெள்ளிக்கிழமை மாலை தவிசாளர் எம்.ஏ.எம். தாஹீர் தலைமையில் பிரதேச சபையின் சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் 6 உறுப்பினர்களும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் 6 உறுப்பினர்களும் இணைந்து கறுப்புப் பட்டி அணிந்து தமது எதிர்ப்பை வெளி யிட்டனர்.

## அலரிமாளிகைக்கு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஈடுபட்டு வருகின்றனர்.

போக்குவரத்துக்கு இடையூறாக காலி முகத்திடல் சுற்றுவட்டத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையை அகற்றுவதற்கு பொலிஸார் இன்று காலை நடவடிக்கை எடுத்திருந்தனர்.

இதையடுத்து வீதியோரத்தில் மேடை அமைக்க போராட்டக்காரர்கள் நடவடிக்கை எடுத்தனர்

இதேவேளை, அலரிமாளிகைக்கு முன்பாக ‘மைனா கோ கம’ போராட்டம் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றமது.

காலி முகத்திடலில் இருந்து மக்கள் குழுவொன்று அப்பகுதிக்கு வந்ததையடுத்து, பொலிஸாருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

இதேவேளை, ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தைப் பதவி விலகுமாறு கோரி காலி முகத்திடலில் மக்கள் நடத்தும் போராட்டம் இன்றுடன் 23 நாம்களைக் கடந்துள்ளது.

காலி முகத்திடலில் இன்று காலையிலும் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையை காணமுடிந்தது.



## மீனவர் சங்கத் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இருவர் தெய்வாதீனமாக உயிர் தப்பினர். சங்கத் தலைவரின் படகு மற்றும் இயந்திரம் என்பன மீளப் பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்துள்ளன.

அண்மையில் குடாநாடு முழுமையாக இடம்பெற்ற போராட்டத்தின்போது சுப்பர்மடம் மீனவர்களே முதலில் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

இதேநேரம் குறித்த விபத்து தொடர்பில் சுப்பர்மடம் மீனவர் சங்கத் தலைவரான தேவராசா தேவகுமாரைத் தொடர்பு கொண்டு கேட்டபோது -

இரவு 11.30 மணியளவில் வலை இழுத்து திரும்பத் தயாரான சமயம் கடற்படையினரின் படகு வருவதை அவதானித்தோம். இதன்போது எமது படகின் இயக்கத்தின் வேகத்தைக் குறைத்து நாம் பார்த்திருந்த சமயம் கடற்படையினரின் படகு வேகமாக வந்து மோதியது.

இதன்காரணமாக எனது 40 குதிரைவலு உடைய இயந்திரமும் மற்றும் படகும் முழுமையாக சேதமடைந்தன.

தற்போது இயந்திரம் 8 லட்சம் ரூபாவும் படகு 5 லட்சம் ரூபாவும் விலையாகும் நிலைமையில் இந்த இழப்பை எம்மால் உடன் ஈடுசெய்ய முடியவில்லை. - என்றார்.







# சீன அரசு ஒத்துழைக்காவிட்டால் நாணயநிதிய பங்களிப்பு கேள்விக்குறியே!

## இலங்கைக்கு எச்சரிக்கை

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து அரசியல் நெருக்கடியும் மேலோங்கியுள்ளது. இதனால் உண்மையான பொருளாதாரப் பிரச்சினைகள் மழுங்கடிக்கப்பட்டுள்ளன.

இந்திய நிதியுதவிகள் மே மாதத்துடன் முடிவடைகின்றமையால் நாட்டின் உண்மையான பிரச்சினைகள் இனிமேல் தான் ஆரம்பிக்கப்படவுள்ளன. குறிப்பாக எரிபொருளைப் பெற்றுக் கொள்வதில் இலங்கை எதிர்கொண்டுள்ள கடும் நெருக்கடிகளே எதிர்வரக் கூடிய பொருளாதார நெருக்கடிகளுக்குக் காரணமாகும்.

எனவே, இலங்கையின் இறுதி எதிர்பார்ப்பாகக் காணப்படுகின்ற சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் சீன கடன்களை மீள செலுத்துவதற்கான திட்டம் தொடர்பாகப் பீஜிங்குடன் கொழும்பு அவசரமாகக் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் என நட்பு நாடுகள் பல ஆலோசனைகளை வழங்கியுள்ளன. குறிப்பாக எரிபொருள் கொள்வனவிற்காக இந்திய நிதி உதவிகளாக 150 கோடி டொலர் கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த நிலையில் இந்தியாவிடமிருந்து கோரப்பட்ட எரிபொருளுக்கான சலுகைகள் அனைத்தும் நிறைவடைந்துள்ளன.

எஞ்சியிருப்பது உரம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களுக்கான கோரிக்கையாகும். சுமார் 20 கோடி டொலர் பெறுமதியான உரத்தை இந்தியா இன்னும் ஓரிரு வாரங்களில் அனுப்பி வைக்கவுள்ளது.

அதே போன்று தமிழ் நாட்டு அரசாங்கத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ள அரிசி மற்றும் பால்மாவை இலங்கைக்கு அனுப்ப மத்திய அரசு இணக்கம் தெரிவித்துள்ளது. ஆனால் இலங்கை அரசாங்கம் இந்த விடயம் தொடர்பில் தமிழ் நாடு அரசுடனோ மத்திய அரசுடனோ பேச்சுகளை முன்னெடுக்கவில்லை. அவ்வாறு இலங்கை தனது நெருக்கடிகளை உணர்ந்து தமிழ்நாட்டிடம் கோரிக்கை விடும் பட்சத்தில் அந்தப் பொருள்களை அனுப்புவதற்கு மத்திய அரசு தீர்மானித்துள்ளது.

மேலும் இரத்த வங்கிகளுக்குத் தேவைப்படுகின்ற இரத்த பாதுகாப்பு பைகளையும் இலங்கைக்கு வழங்க இந்தியா தீர்மானித்துள்ளது. அதே போன்று உலக வங்கியால் கொவிட் நிலைமைகளைக் கட்டுப்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டிருந்த நிதியை தற்போதைய மருந்து நெருக்கடிகளை தவிர்க்கும் வகையில் எஞ்சிய அந்த நிதியை விடுவிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர இந்தியாவிடமிருந்தோ ஏனைய நாடுகளிடமிருந்தோ அத்தியாவசியப் பொருள்களுக்கான கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் கலந்துரையாடியதாகத் தெரியவில்லை.

ஏனெனில் இலங்கையின் இறுதி நம்பிக்கையாகியுள்ள சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கு கடனை மீளச் செலுத்தும் இயலுமை தொடர்பான அறிக்கையை இன்னும் தயார்ப்படுத்தவில்லை.

குறிப்பாக சீனாவுடன் இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடவில்லை. அண்மையில் ஊடக சந்திப்பை நடத்திய கொழும்பிலுள்ள சீன தூதுவர், 'சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை செல்வதாயின் உத்தேச 250 கோடி டொலர் கடன் உள்ளிட்ட விடயங்கள் பாதிக்கப்படலாம். - எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கை செல்வதை சீனா விரும்பவில்லை என்பதே உண்மை. ஆனால் சீனாவின் ஒத்துழைப்பு இன்றி சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்வதும் சாத்தியமற்றதாகும். ஏனெனில் இலங்கை பெற்றுள்ள சர்வதேச கடன்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நாடுகள் ஆக்கபூர்வமான சமிஞ்ஞைகளை வெளிப்படுத்த வேண்டும். அதாவது இலங்கையின் கடன் செலுத்தும் இயலுமை மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்களுக்கான ஆதரவு நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டும். இந்நிலையில் சீனாவுடன் இலங்கை பேச்சுகளை முன்னெடுக்காமை நெருக்கடியான நிலைமையைத் தோற்றுவிக்கும்.

எனவே கூடிய விரைவில் பீஜிங்குடன் கலந்துரையாடி இணக்கப்பாட்டுக்கு வருவது கொழும்பைப் பொறுத்தவரையில் சவாலான விடயமாகும். மறுபுறம் இனி ஏற்படக் கூடிய எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு இலங்கையிடமிருக்கும் திட்டங்கள் தொடர்பாக சந்தேகங்களே உள்ளன.

ரஷ்யா மற்றும் சவதி ஊடான எரிபொருள் கொள்வனவு தொடர்பாக முன்னெடுப்புக்கள் காணப்படுகின்றன என குறிப்பிடப்படுகிறது. ஆனால் சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகள் காரணமாக இவ்வாறு எரிபொருளை பெற்றுக்கொள்வதும் சவால் மிக்கதாகும்.

அதே போன்று சவுதியிலிருந்து கொழும்பிற்கு வரக்கூடிய எரிபொருள் மற்றும் ஏனைய சரக்கு கப்பல்களின் வருகையையும் மட்டுப்படுத்துவது தொடர்பாகக் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது. இதற்குக் காரணம் கொழும்பு துறைமுகத்தில் காணப்படக் கூடிய எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அடிப்படை சேவைகள் தொடர்பிலான பிரச்சினைகளாகும். எனவே மே மாதம் என்பது இலங்கையின் மிக நெருக்கடியான நிலைமையின் ஆரம்பமாகக் கருதப்படுகிறது. எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு கண்டால் மாத்திரமே ஏற்படக் கூடிய ஏனைய பொருளாதார சவால்களை ஓரளவு முகாமைத்துவம் செய்யலாம்.

அத்தியாவசியப் பொருள்களை நெருங்கிய நட்பு நாடுகளிடமிருந்து பெற்றுக்கொள்ள முடிந்தாலும், எரிபொருளை அவ்வாறு பெற்றுக் கொள்ள முடியாது என்பதே உண்மையாகும்.

# இடைக்கால அரசு அமைப்பது தொடர்பாக பெரமுன எந்த தீர்மானமும் எடுக்கவில்லை!

## அதன் செயலாளர் காரியவசம் திட்டவட்ட அறிவிப்பு



இடைக்கால அரசாங்கம் தொடர்பில் பொதுஜன பெரமுன கட்சி மட்டத்தில் இதுவரை எவ்விதத் தீர்மானங்களையும் முன்னெடுக்கவில்லை.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பதாக ஜனாதிபதியின் தீர்மானம் தொடர்பில் எதிர்வரும் வாரம் கட்சி ரீதியில் உறுதியான தீர்மானத்தை அறிவிப்போம் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்கே நாடாளுமன்றில் பெரும்பான்மை பலம் உள்ள நிலையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க முயற்சிப்பது எந்தளவிற்கு நியாயமானது என்ற தர்க்கம் காணப்படுகிறது.

அரசாங்கத்தில் இருந்து கொண்டு அரசாங்கத்தைப் பலவீனப்படுத்திய தரப்பினர் தற்போதைய நெருக்கடிகளுக்குத் தீர்வு காண இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்குமாறு தொடர்ந்து வலியுறுத்துவது வேடிக்கையாகவுள்ளது.

சமூக கட்டமைப்பில் தோற்றம் பெற்றுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிக்க வேண்டிய தேவை கிடையாது.

எரிபொருள், எரிவாயு மற்றும் மின்விநியோக கட்டமைப்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு ஒப்பீட்டளவில் தீர்வு காணப்பட்டுள்ளது.

இடைக்கால அரசாங்கம் தொடர்பில் கட்சி மட்டத்தில் இதுவரை எவ்வித தீர்மானங்களும் முன்னெடுக்கப்படவில்லை.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை ஸ்தாபிப்பது தொடர்பாக ஜனாதிபதி முன்னெடுத்துள்ள தீர்மானம் தொடர்பாக எதிர்வரும் வாரம் உறுதியான தீர்மானத்தை அறிவிப்போம். அரசாங்கத்துக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை வெற்றிகொள்ள தயாராகவுள்ளோம். பொதுஜன பெரமுனவிற்கே பெரும்பான்மை பலம் உள்ளது. எதிர்த்தரப்பினர் நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டு வரும் வேளை பெரும்பான்மை பலத்தை உறுதிப்படுத்துவோம். - என்றார்.

# தாய்லாந்தில் இருந்து எரிவாயு கொள்வனவு!

தாய்லாந்தில் இருந்து எரிவாயுவை கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்துள்ளதாக லிற்றோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

புதிய ஒப்பந்தத்தின் கீழ் ஒரு மெற்றிக் தொன் எரிவாயு 95 டொலர் என தாய்லாந்தில் இருந்து வருடத்துக்கு 3 லட்சம் மெற்றிக் தொன் எரிவாயுவை வாங்குவதாக நிறுவனம் கூறியுள்ளது.

முன்னர் ஓமானில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட ஒரு மெற்றிக் தொன் எரிவாயுவிற்கு 105 டொலர் செலவானது என்றும் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. அதன்படி, தாய்லாந்தில் இருந்து எரிவா யுவை கொள்வனவு செய்வதன் மூலம் ஒரு மெற்றிக் தொன் ஒன்றுக்கு 10 டொலர் என செலவைக் குறைக்க முடிந்துள்ளது என அந்நிறுவனம் கூறியுள்ளது.

அதன்படி முன்பதிவு செய்யப்பட்ட எரிவாயுவின் முதல் தொகுதி தாய்லாந்தில் அடுத்த மாதம் இலங்கைக்கு வழங்கப்படும் என நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

# வடக்கு, கிழக்கு சிவில் சமூகச் செயற்பாட்டாளர்களினால் தமிழர் கட்டமைப்பு ஒருங்கிணைப்பு குழு அங்குரார்ப்பணம்

வட, கிழக்கு சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து யாழ். இலங்கை வேந்தன் மண்டபத்தில் ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பிற்கான ஒருங்கிணைப்புக் குழுவை அங்குரார்ப்பணம் செய்து தற்போதைய இலங்கைத் தீவின் நெருக்கடியில் தமிழரின் வகிபாகம் தொடர்பாக ஆராய்ந்தனர்.

வடக்கு கிழக்கு சார்ந்த சைவ ஆதீன முதல்வர்கள், கத்தோலிக்க குரு முதல்வர்கள், சமய, சமூக, தொழிற்சங்கப் பிரதிநிதிகள் பல்கலைக்கழகம் சார் பேராசிரியர்கள், மாணவ பிரதிநிதிகள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், வங்கியாளர்கள், ஊடகவியலாளர், கல்விப்புலம் சார்ந்தோர் என பல்துறை ஆளுமை சார் செயற்பாட்டாளர்கள் தமது கருத்துக்களைப் பரிமாறினர்.

தமிழ் தேசியம் சார்ந்து பொருளாதார நெருக்கடியை எவ்வாறு அணுகுவது, சிங்கள மக்களுக்கும் சர்வதேசத்துக்கும் இந்தத் தருணத்தில் தமிழ் மக்கள் ஓர் திரட்சியாக எவ்வாறு தமிழரின் அடிப்படை அரசியல் பிரச்சினைகளைக் கொண்டு சேர்ப்பது, பொருளாதாரப் பிரச்சினைக்கு மூலவேர்க் காரணமான தமிழ் மக்களின் மீதான அடக்கு முறைகளுக்கான தீர்வைப் பெற்றுக்கொள்ள சிங்கள மக்களிடையே மன மாற்றத்தைத் தூண்டல், சுயசார்பு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புதல் என பல கோணங்களில் கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இறுதியில், வடக்கு -கிழக்கு தழுவிய மாவட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருங்கிணைப்புக் குழு தெரிவுசெய்யப்பட்டது. தொடர் கலந்துரையாடல்கள் வாயிலாகத் தென்னிலங்கை சிங்கள மக்களுக்கான செய்தியான உங்களைப் புரிந்துகொள்கின்றோம். எங்களைப் புரிந்துகொள்ளுங்கள் எனும் தமிழ் மக்களின் அபிலாஷைகளை ஒருமித்த குரலாகக் கொண்டு சேர்க்கும் வேலைத்திட்டங்களைப் பல தளங்களில் தொடர்ச்சியான கருத்தாடல்களுடன் முன் கொண்டு செல்வதாக தீர்மானிக்கப்பட்டு கூட்டம் நிறைவு பெற்றது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.05.2022இல் வெளியிடப்பெற்றது.